## DEPOSITION OF WITNESS

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 78/2025 |
| Name | : Meenal |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோமனூரில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி எனது மகன். 2023ம் ஆண்டு ஆவணி மாதம் காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி எனது மகன் காரை ஓட்ட நான், எனது மகள் விசாலாட்சி மற்றும் மருமகள் விசாலாட்சி ஆகியோர் வந்து கொண்டிருந்த போது உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது அப்போது சாலை வேலைகள் நடந்து கொண்டிருந்தது பாலத்தின் மீது வாகனம் மோதி எங்களுக்கு காயம் ஏற்பட்டது. விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னிடம் வெற்று காகிதத்தில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கடந்த 21.08.2023 ம் தேதி காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி எனது மகன் காரை ஓட்ட நான், எனது மகள் விசாலாட்சி மற்றும் மருமகள் விசாலாட்சி ஆகியோர் வந்து கொண்டிருந்த போது உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது அப்போது சாலை வேலைகள் நடந்து கொண்டிருந்தது பாலம் கட்டிக்கொண்டிருப்பது தெரியாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சென்று பாலத்தின் மீது மோதியதில் எனக்கும், எனது மகள், மகன் மற்றும் மருமகளுக்கு காயம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு எதிரி எனது மகன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:45:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 78/2025 |
| Name | : Visalatchi |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோமனூரில் வசிக்கிறேன். நான் தற்போது படித்து முடித்துள்ளேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரி எனது அண்ணன். 2023ம் ஆண்டு ஆவணி மாதம் காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி எனது அண்ணன் காரை ஓட்ட நான், எனது அம்மா மற்றும் அண்ணி விசாலாட்சி ஆகியோர் வந்து கொண்டிருந்த போது நான் தூங்கிக்கொண்டிருந்தேன் என்ன நடந்தது என்று தெரியாது. விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 21.08.2023ம் தேதி காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி எனது அண்ணன் காரை ஓட்ட நான், எனது அம்மா மற்றும் அண்ணி ஆகியோர் வந்து கொண்டிருந்த போது உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது அப்போது சாலை வேலைகள் நடந்து

கொண்டிருந்தது பாலம் கட்டிக்கொண்டிருப்பது தெரியாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சென்று பாலத்தின் மீது மோதியதில் எனக்கும், எனது அம்மா, அண்ணன் மற்றும் அண்ணிக்கு காயம் ஏற்பட்டதாக வாக்குமூலம் கொடுத்துவிட்டு எதிரி எனது அண்ணன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:45:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்